**செலசினே மீடியா சொலூசன்ஸ் தனியார் கம்பனி - 2023**

---------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

செலசினே மீடியா சொலூசன்ஸ் தனியார் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 03 மாத காலப்பகுதிக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அக்காலப்பகுதிக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 03 மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 03 மாத காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது

கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச்செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சரியான உள்ளகக் கட்டுபாட்டு முறைமை ஒன்றைப் பேணிச் செல்வதற்காக கணக்குக் குறியீடுகளுகடன் வகைப்படுத்தப்பட்ட கணக்குகளின் நிரல் ஒன்று நாளது வரையாக பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் அந்த அந்த கணக்குகளை இனங்காண்பதற்கான கணக்கு குறியீடுகள் (Accounts Code) முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | Accounts Code உடன் வகைப்படுத்தப்பட்ட கணக்கு நிரல் ஒன்று நாளதுவரையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும். | கணக்கு குறியீடுகளுடன் வகைபடுத்தப்பட்ட கணக்குகளின் நிரல் ஒன்றை நாளதுவரையாக பேணிச்செல்ல வேண்டி இருந்ததுடன் கணக்கு குறியீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |

#### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன்இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கீழ் இனங்காணப்பட வேண்டிய 01 மாதத்திற்கும் 03 மாதங்களுக்கும் இடையில் முதிர்ச்சி அடைய வேண்டிய ரூபா 15,052,990 பெறுமதி உடைய 04 நிலையான வைப்பு மீதிகள் முதலீடுகளில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டு மீதி ரூபா 15,052,990 இனால் மிகை மதிப்பீட்டுக்கு உட்பட்டிருந்ததுடன் காசு மற்றும் காசுக்கு | இந்த மூன்று மாத வைப்பை தற்போதைய வட்டி விகிதத்தினையும் கவனத்தில் கொண்டு 06 மாத வைப்பாக மாற்றி முதலீட்டின் கீழ் காண்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முதலீடு மற்றும் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமமானவைகளும் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டின் போது இடம் பெற்ற ஊழியர் நிதி மோசடி தொடர்பாக ரூபா 11,988,000 மீதியினை சரி செய்யும் போது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த அந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் மீள வெளியிடப்பட்டிருக்கவில்லை. | அந்த அந்த ஆண்டுகளுக்கான நிதி நிலைமைக் கூற்றை மீண்டும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய தவறுகளைச் சரி செய்யும் போது அந்த தகவல்களுக்கு உரித்தான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் மீண்டும் வெளியிட வேண்டி இருந்த போதிலும் 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செலசினே கம்பனியால் 2022 ஆம் ஆண்டின் போது இடம் பெற்ற தவறுகளை சரி செய்யப்பட்ட போதும் சரி செய்யப்பட்ட ரூபா 21,153,195 பெறுமதி உடைய சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் நிறுத்தி வைத்தல் உழைப்பு மீதிகள் மீள வெளியிடப்பட்டு 2022 சனவரி 01 இல், 2022 திசெம்பர் 31 இல், மற்றும் 2023 செம்தெம்பர் 30 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றிலும், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றிலும் உள்ளடங்கப்பட்ட விரிவான குறிப்புக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 42 ஆம் பிரிவின் பிரகாரம் மீள் வெளியிடுவதற்கும் அதற்குரிய விரிவான குறிப்புக்களை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க முன்னைய காலப்பகுதிக்கான தவறு சரி செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) (i) | 2021 இலக்கம் 18 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்ட ரூபா 24,784,856 ஆன தேசத்தை கட்டியெழுப்பும் வரி அட்டுறு மீதி மற்றும் ரூபா 347,265 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி கிடைக்க வேண்டிய மீதியில் தேறிய பெறுமதி ரூபா 24,437,590 தொகை 2022 ஆம் ஆண்டின் போதும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களில் சீராக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக உறுதிப்படுத்தல் ஒன்று வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிதிக் கூற்றுக்களினது குறிப்புக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து 2024 இன் கணக்குகளுடன் சமர்பிக்கப்படும். | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களில் சீராக்கும் போது நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக குறிப்பு ஒன்றினால் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டிற்குரிய கூட்டுப் பெறுமதி ரூபா 4,396,999 ஆன நேர் செலவினம் 2021 ஆம் ஆண்டின் போது முற்பணமாக | உரிய குறிப்புக்கள் நியமத்தின் பிரகாரம் மீண்டும் | கணக்கீட்டு நியத்திற்கு இணங்க சரி செய்யப்பட்ட முன்னைய ஆண்டின் |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது நிறுத்தி வைத்த உழைப்புக்களில் சீராக்கி சரி செய்யப்பட்ட போதிலும் 2021 சனவரி 01 இல், 2021 திசெம்பர் 31 இல், மற்றும் 2022 ஆம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு மீதிகள் மீண்டும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது ஏற்பட்ட தவறுகளின் தன்மை மற்றும் தவறு இழைக்கப்பட்ட பெறுமதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் விரிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அப்பெறுமதிகளின் கூட்டுத்தொகை மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காலப்பகுதிக்குரிய ஆரம்ப மீதிகளுக்கும் வேறுபாடுகள் ஏற்பட்டதன் காரணமாக விரிவான நிதிக்கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வெளியிடுவதற்கும் முன்னைய ஆண்டில் ஏற்பட்டிருந்த தவறுகளை சரி செய்வதற்கும் குறிப்பு ஒன்றின் மூலம் வெளியிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களில் குறிப்பீடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதனை சரி செய்வதுடன் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும். | ஏற்பட்டிருந்த தவறுகளின் தன்மை மற்றும் சரி செய்யப்பட்ட பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை நிதி சார் அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இன் 5.5.13 முதல் 5.5.16 வரையான காலப்பகுதிகளில் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி சொத்துக் கடன் ஆபத்தை அடிப்படையாக இனங்கண்டதில் இருந்து கவனத்தில் கொள்ளக்கூடிய வகையில் அதிகரித்து இருக்குமாயின் எதிர் பார்க்கப்பட்ட கடன் நட்டம் (Expected Credit Loss) பிரவேசத்தின் பிரகாரம் இழப்பீட்டு நட்டத்திற்காக சீராக்க வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 306,916,350 ஆன மொத்த கடன் பட்டோர் பெறுமதியில் 62 சதவீதம் 189,717,470 ஆன 05 வருடங்களை விஞ்சிய ஆபத்துடன் கூடிய கடன் பட்டோர் மீதிகளை உள்ளடக்கி 90 நாட்களை விஞ்சிய கடன்பட்டோருக்காக 5 சதவீத அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளுதல் கம்பனியின் கொள்கையான கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கம்பனியின் அறவிட முடியாக் கடன் ஒதுக்கீட்டு கொள்கை தொடர்புடன் கலந்துரையாடலுக்கு உட்படுத்தி நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றது. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்க இழப்பீட்டு நட்டத்திற்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் 77 மற்றும் 81(உ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட வாடகைச் சொத்துக்கள் மற்றும் வரி வருமானத்தை இனங்காண வேண்டியிருந்த போதிலும் 2023 ஒக்தோபர் 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை 03 மாத காலப்பகுதியில் ரூபா 1,620,393 பிற்போட்ட சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாது இருந்ததுடன் அந்த பெறுமதியில் | நிதி நிலைமைக் கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் அப்பெறுமதி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆதனங்கள், பொறிகள் மற்றும் | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பிற்போட்ட சொத்துக்கள் இனங்காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உபகரணங்களின் பெறுமதியின் அடிப்படையில் மூலதன படிகள் 03 காலப்பகுதிக்கு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் 79 மற்றும் 80 பந்தியின் பிரகாரம் வருமான வரி செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட செலவினம் சுற்றுலா நிதி கூற்றுக்களில் தனியாக வெளிப்படுத்த இருந்த போதிலும் 2023 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2023 செப்தெம்பர் 11 வரையான 03 மாத காலப்பகுதிக்காக கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் 79 மற்றும் 80 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க வருமான வரி செலவினத்தில் உள்ளடக்கி செலவினங்கள் சுற்றுலா நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஏ) | கம்பனியால் தமது நிருவாக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக குத்தகை முறையின் கீழ் கைப்பற்றப்பட்ட கட்டிடத்திற்குரிய ரூபா 21,000,000 ஆரம்ப கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறுமதி இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 இன் பிரகாரம் வாய்மொழி மூல உரித்தான சொத்துக்களின் (Right to use Asset) ஒரு பகுதியாக இனங்காண்பதற்கு பதிலாக முற்பணக் கொடுப்பனவுக் கணக்கில் பதியப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்கள் நடைமுறைச் சொத்துக்கள் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 இன் பிரகாரம் கணக்குப் பெறுவனவுகள் கணக்கு வைத்தல் மற்றும் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்குரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை நிதி சார் அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்க குத்தகை வாடகையின் கீழ் கைப்பற்றப்பட்டுள்ள கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் உரித்துடன் சொத்தொன்றின் ஒரு பகுதியாக இனங்காணப்படல் வேண்டும். |
| (ஐ) | மேற்கூறப்பட்ட நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த கட்டிடத்திற்காக மாதாந்த குத்தகை வாடகைத் தவணையில் உள்ளடக்கப்பட்ட வட்டிச் செலவினமான ரூபா 1,268,932 வருமானக் கூற்றில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக மொத்த குத்தகை வாடகைத் தவனை கட்டிட வாடகை செலவினமாக ரூபா 2,175,000 வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டதன் காரணமாக ஆண்டின் நட்டம் ரூபா 906,068 இனால் மிகை மதிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது. | இந்த தவறை சரி செய்து நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மாதாந்த குத்தகை வாடகை தவணையில் உள்ளடக்கப்பட்ட வட்டிச் செலவினம் வருமானக் கூற்றில் இனங்காணப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் காசாசக கிடைத்த வட்டி வருமானம் ரூபா 629,005 ஆக இருந்த போது காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 757,889 பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசாக கிடைத்த வட்டி வருமானம் ரூபா 128,884 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடங்களில் இருந்தான தாக்கங்களுடன் காசுப் பாயய்ச்சல் கூற்று மீண்டம் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் மற்றும் முதலீடுகள் சனியாக இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட மீதியில் கடன் பட்டோர் நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆன மீதியுடன் ஒப்பீடு செய்த போது ஒரு நிறுவனத்தின் மீதி ரூபா 3,016,081 அதிகரித்தும், 03 நிறுவனங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 1,815,879 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. சரியான பெறுமதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | எமது நிறுவனத்தின் கடன்பட்டோர் மீதி சரியானதாகும். இது தொடர்பாக மேலதிகமான உறுதிப்படுத்தலின் பின்னர் அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு காலப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களில் சீராக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் உருவாகாத ரூபா 1,769,686 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களில் இருந்தான தாக்கங்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்று மீண்டும் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண சட்டத்தின் 3(1) பிரிவின் பிரகாரம் ஏதாவது நபர் ஒருவரினால் செலுத்தப்பட்ட பொருளாதார சேவை கட்டிடம் அந்த நபரால் உரிய மதிப்பீட்டாண்டிற்கு உரிய காலாண்டிற்காக செலுத்த வேண்டிய வருமான வரியை ஈடு செய்ய முடியும். எனினும் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டில் இருந்து வருமான வரி செலுத்தாத பின்புலத்தில் 11 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் பெறுவனவுக்கு உரித்தில்லாத ரூபா 3,599,749 மீதியொன்று கிடைக்க வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணமாக நிதி நிலைமைக் கூற்றில் | செலசினி தொலைக்காட்சி நிறுவனத்தினால் செலுத்த வேண்டிய வருமான வரி கடப்பாட்டிற்காக முன்னர் செலுத்தப்பட்ட முற்பண வரி செலுத்தலாக பொருளாதார சேவைக் கட்டணமாக ரூபா 3,599,749 மீதி தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் அந்த பெறுமதியை எமது பெயரில் காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய பெறுமதிகளை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |

வியாபாரம் மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் நடைமுறைச் சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| 04 நிறுவனங்களுக்கு உரிய வியாபார மற்றும் செலுத்த வேண்டிய மீதி | ரூபா 80,172,379 | ரூபா 79,387,263 (உரிய நிறுவனத்தின் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம்) | ரூபா 785,116 | எமது நிறுவனத்தின் கடன் கொடுத்தோர் மீதி சரியாக உள்ளதுடன் அதனை உறுதிப்படுத்தி பின்னர் அறிக்கை இடப்படும். | கடன் கொடுத்தோர் மீதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | கடன் பட்டோர் | 306,726,600 | மீதி உறுதிப்படுத்தல் | சகல கடன்பட்டோருக்கும் இலத்திரனியவியல் தபால் தொழில் நுட்பம் ஊடாக மிதிகளை உறுதிப்படுத்தி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்கு நேரடியாகக் கிடைக்கின்ற மீதிகளை உறுதிப்படுத்தி கோருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நேர் செலவினம் | 38,967,586 | நேர் செலவின மீதிகளுக்கான விரிவான பட்டோலை | ரூபா 3,967,586 ஆன நேர் செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட செலவினத்திற்காக மீண்டும் பட்டோலை இதனுடன் இணைத்து அனுப்புகின்றோம். | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான விரிவான பட்டோலை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களை உறுதிப்படுத்துவதற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக் களில் மேற்கொள் ளப்பட்ட சீராக்கங்க ளின் கட்டட வாடகை சீராக்கம் நேர் செலவினம் | 4,804,831<br>3,035,145 | 2023 ஒக்தோபர் 01 முதல் திசெம்பர் 31 வரையான காலப் பகுதிக்குரிய நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களில் சீராக்கப்பட்ட கட்டட வாடகை சீராக்கம் ரூபா 4,804,831 மற்றும் ரூபா 3,035,145 நேர் செலவின சீராக்கங்களுக்கு உரிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் | பதிலளிக்கப்பட வில்லை | நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களில் மேற்கொள்ளப்படுகின்ற சீராக்கங்களுக்காக நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு காலப்பகுதியில் இறுதித் திகதியில் உள்ளவாறு வியாபாரக் கடன் பட்டோர் மீதி ரூபா 306,916,350 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 182,732,477 தொகை 05 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதியையும், ரூபா 42,012,529 தொகை 1-5 வருடங்களுக்கு இடையிலான கடன்பட்டோர் மீதியையும் உள்ளடக்கியிருந்த போதிலும் உரிய மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவிட நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் பல வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு உரிய வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின்<br><br>வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 243,118,160 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 52,922,069 உம், 1-5 வருடங்களுக்கு இடையிலான | இந்த கடன் பட்டோர் மீதியைத் தீர்த்து வைக்கும் போது அந்த பணிகளுக்கு உரியதாக கிடைக்க வேண்டிய கடன் பட்டோர் மீதி கிடைத்த பின்னர் கடன் கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் கம்பனியின் வழமையான கொள்கை ஆகும். | கடன் கெடுத்தோரை இனங்கண்டு விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைளெடுத்தல் வேண்டும். மறை மீதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 49,139,360 உம் ஆகும். உரிய கடன் மீதிகளில் 04 வருடங்கள் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,436,550 மறை கூட்டுப்பெறுமதியையும் கடன்கொடுத்தோர் மீதி உள்ளடக்கியுள்ளது.

## 1.7 சட்டங்கள் , விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய இலக்கம் 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையின் VII அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | இந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் 04 உத்தியோகத்தர்களுக்கு சம்பளமாக ரூபா 1,519,236 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த கணக்காய்வு ஐயவினாவிற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் சரியானது என ஏற்றுக் கொள்கின்றோம். இந்த விடயங்கள் தொடர்பாக 2024 சனவரி 23 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் பத்திர இலக்கம் 2024/01-05 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த தீர்மானம் இந்த சம்பளத் திருத்தம் மற்றும் அந்த காலப்பகுதியின் போது நடைபெற்ற பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டமையால் அதில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 10 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை 842 மற்றும் 1998 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய இலக்கம் 359 என்ற அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2009 செம்தெம்பர் 01 ஆந் திகதிய இலக்கம் DMA/2009(2) என்ற முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டின் வலுவான தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் நிலையான சொத்து பதிவேடு நாளது வரையாக்கி ஒழுங்கு முறையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு கணனி முறைமையின் ஊடாக பேணிச் செல்லப்படுகின்றது. | நிலையான சொத்துப் பதிவேட்டை நாளது வரையாக்கி ஒழுங்கு முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும். |

## 1.8 தகவல் தொழில்நுட்பம் (IT) பொது கட்டுப்பாட்டு முறைமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்குகளைத் திருத்துதல் மற்றும் அவற்றுக்குரிய தகவல்களை உள்ளடக்குதல் கணக்குப் பிரிவின் உரிய மேற்பார்வையுடன் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான முறையான நடைமுறை ஒன்று பின்பற்றப்படாமல் பல்வேறு நபர்களினால் அவர்களுக்குத் தேவையான பிரகாரம் கணக்கீட்டு நடைமுறையில் பல்வேறு கணக்குகளைத் திறப்பதற்கும் அவற்றில் பல்வேறு தகவல்களை உள்ளடக்கியதன் காரணமாக கணக்கீட்டு முறைமையை ஒழுங்கு முறையாகவும் மற்றம் முறையாகவும் பேணிச் செல்வதில் ஆபத்துக்கு உட்பட்டு இருந்ததுடன் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற தகவல்களின் சரியான தன்மை தொடர்பாக ஏற்றுக் கொள்வதற்கான இயலுமை குறைவடைந்திருந்தது. கணனி முறைமைக்கு நுழைந்து கணக்குகளை வைத்தல் கணக்கு பிரிவுக்கு மாத்திரம் வரையறுக்க வேண்டியதாக இருந்த போதிலும் ஏனைய பிரிவுகளின் 07 உத்தியோகத்தர்களுக்கு உள்நுழைவு குறியீடு வழங்கி கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் முறைமைகளின் சரியான தன்மையில் ஆகக் கூடிய ஆபத்து நிலைமையாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | உங்களின் அவதானிப்பின் அடிப்படையில் தற்போது அந்த தவறு சரி செய்யப்பட்டுள்ளது. கணக்குகளை ஆரம்பித்தல், தகவல்களை உள்ளடக்குதல், கணக்குப் பிரிவின் சரியான மேற்பார்வையுடன் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய அதிகாரத்துடன் தகவல்கள் தொழில் நுட்ப பொது கட்டுப்பாட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். முகாமைத்துவ முறைமை ஒழுங்கு முறையாகவும் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

2022 ஆம் ஆண்டின் இலாபம் ரூபா 14,695,458 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த 2023 ஆம் ஆண்டில் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2023 செப்தெம்பர் 30 காலப்பகுதியின் நட்டம் ரூபா 18,647,695 மற்றும் செலசினே மீடியா சொலூசன்ஸ் தனியார் கம்பனியின் மீளாய்வாண்டின் 03 காலப்பகுதியின் நட்டம் ரூபா 4,828,750 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் உற்பத்தியாளர் பதவியின் உத்தியோகத்தர் சேவையில் நியமிக்கப்படாமையின் காரணமாக உற்பத்தி பணிகளுக்காக அந்தப் பிரிவின் பதவியணியினர் செயற்படுவற்கு முடியாது இருந்தது. 2023 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவில் 02 உற்பத்திகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான உற்பத்திச் செலவினமாக ரூபா 2,319,427 கம்பனியால் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த உற்பத்தி நடவடிக்கைகள் 22 வெளி நிறுவனங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான செலவினமாக ரூபா 11,396,913 வெளி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த உற்பத்தி நடவடிக்கைகள் 22 இனதும் மொத்தப் பெறுமதி ரூபா 2,995,000 தொகை ஒரே நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | எமது கம்பனியால் ஆகக் குறைந்த விலை மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ள முடியுமான மற்றும் அதிக இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ள முடியுமான பணிகள் மாத்திரம் கம்பனிக்குரிய மனித மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திப் பணிகளுக்காக முகாமையாளர் (உற்பத்தி) இனால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே கம்பனியின் விலை மதிப்பீட்டை மேற்படி உயர்ந்த பெறுமதி ஒன்றைப் பெற்றுக் கொள்கின்ற பணிகளுக்காக கம்பனியில் பதிவு செய்த வழங்குனர்களிடமிருந்து விலை மதிப்பீட்டைப் பெற்று குறைந்த கூறு விலையின் கீழ் மேற்கொள்ளக்கூடிய பணிகள் வெளி வழங்குனர்களினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. உற்பத்தியாளர் பதவியில் இருந்த ஊழியரின் கடமைகள் சேவைப் பங்களிப்பில் எதிர்பார்ப்பிற்கு இணங்காதிருந்தமையின் காரணமாக சில சந்தர்ப்பங்களின் போது வெளித்தரப்பினரின் சேவையை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. | உற்பத்தி நடவடிக்கைகள் கம்பனியின் மூலம் மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் முறையான வேலைத்திட்டம் ஒன்று முகாமைத்துவத்தால் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த 05 வருட காலத்தில் விளைவுகளை கவனத்தில் கொள்ளும் போது கம்பனி 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 8,300,209 இலாபத்தை பெற்றிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 29,339,593 நட்டம் ஆகும். 2021 ஆம் ஆண்டில் வரிக்கு பின் நட்டம் ரூபா 6,841,002 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 22,498,591 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டில் | பதிலளிக்கப்படவில்லை | நிதி நிலமையின் வீழ்ச்சியினைத் தவிர்த்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். வருமானத்தை உயர்த்துவதற்னு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| நட்டம் ரூபா 14,695,458 ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் செலசினி தொலைக்காட்சி நிறுவனத்தின் 2023 செப்தெம்பர் 30 காலப்பகுதியில் நட்டம் ரூபா 18,647,695 ஆக இருந்ததுடன் செலசினே மீடியா சொலூசன்ஸ் தனியார் கம்பனியின் மீளாய்வாண்டின் 03 மாத காலப்பகுதியில் நட்டம் ரூபா 4,828,750 ஆகும். | | வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் உற்பத்திப் பிரிவுக்குச் சொந்தமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் அநேகமான காலம் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் ஒரு கூட்டிணைவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஈடுபடுத்தப்படுகின்ற கணனி திரை செயற்பாடற்று காணப்பட்டதன் காரணமாக அவற்றில் சிலவற்றை அமுல்படுத்த முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது. செயற்படுத்தப்படுகின்ற கணனிகளும் ஸ்தாபிக்கப்பட்ட வைரஸ் மென்பொருள் (Virus Guard) நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது கணனிகள் காணப்பட்ட வைரஸ் மென்பொருளை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்களில் நல்ல இருப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் கலை பணிப்பாளர் பதவியில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர் வரைதல் பிரிவில் ஆவணங்களை பரீட்சிக்கும் பணியில் முழு நேரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் கலைப் பணிப்பாளராக உற்பத்திப் பிரிவிற்கு வழங்கக் கூடியதாக இருந்த பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் முகாமைத்துவம் தவறியிருந்தது. | அவர் கலைப்பாளராக பதவிக்கு சேர்க்கப்பட்டு 2019 நவம்பர் 18 ஆந் திகதி முதல் ஆவணங்களை பரீட்சிக்கும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | மனித வளங்களை முறையான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 – 2026 கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 903,000,000 வருமானம் இலக்காகக் கொள்ளப்பட்ட போதும் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 233,328,718 ஆக இருந்ததுடன்இலக்கில் அடையப்பட்ட வீதம் 26 சதவீதம் ஆகும். அவ்வாறே 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டு விற்பனை வருமானம் 28 சதவீதத்தால் அதாவது ரூபா 89,765,607 பெறுமதியால் குறைவடைந்திருந்தது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விற்பனை இலக்கை அடைந்து கொள்வதற்காக செலசினி கம்பனியால் ஸ்தாபிக்கப்பட்ட உபாய வழிகள் எதுவும் இந்தக் காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே திட்டமிடல் மற்றும் உள்ளபடியான விளைவுகளுக்கு இடையே முரண்களை இனங்காண்பதற்கும் தேவையானச ரி செய்தல்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிதி நெருக்கடியின் காரணமாக வியாபார சந்தர்ப்பங்கள் செலசினி நிறுவனத்திற்குக் கிடைக்காமையினால் விற்பனை வருமானம் கணிசமான அளவில் குறைவடைந்திருந்தது. அதனால் ஸ்தாபிக்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட இலக்குகள் மற்றும் உள்ளபடியான விற்பனை இலக்குகளுக்கு இடையே முரண்கள் காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் முகாமைத்துவத்தால் திட்டமிடப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றது. | திட்டம் இடல் பொருத்தமாக இருக்க வேண்டி இருந்ததுடன் முரண்களை இனங்கண்டு சரி செய்யும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கூட்டிணைந்த திட்டத்திற்கு இணையாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாது இருந்ததுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2023 ஆம் ஆண்டின் போது தனியார் பிரிவின் சேவைப் பங்களிப்பாளரால் செலசினி கம்பனியுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்காக இலக்கு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஆண்டின் போது இந்த இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட் பிரகாரம் புதிய சேவை பங்காளிப்பாளர்களை கவர்ந்து கொள்ளும் இயலுமை காணப்படவில்லை. 2024 ஆம் ஆண்டின் போது வியாபார சந்தர்ப்பங்களைக் கண்டறிதல் மற்றும் புதிய சேவைப் பங்களிப்பாளர்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | இலக்கினை அடைந்து கொள்வதற்கான உபாய வழிகள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் உற்பத்திப் பிரிவின் பதவியணியினரில் ஏனைய தொழில் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி கம்பனியின் வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதற்கு 2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் | கூட்டுணைக்கப்பட்ட 02 மேடைகளில் எந்த ஒரு பணிகளும் இல்லாத காலத்தில் கணனி செயற்படுத்தப்பட்டு ஏனைய மின்சார உபகரணங்களை செயற்படுத்தியதன் காரணமாக நிறுவனத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்ட மேலதிக மின்சார | வளங்களை சரியான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்திப் பிரிவின் பதவியணியினர் குறைவான பயன்பாட்டுடன் கம்பனியில் இருந்தமை மற்றும் கூட்டிணைந்த மேடைகளில் குறைவான பயன்பாட்டு நிலைமை காணப்பட்டமை களப்பரிசோதனையின் போது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட திட்டங்களுக்காக ஒழுங்கமைத்தல், ஊழியர்களை ஈடுபடுத்துதல் மற்றும் நிர்வகித்தல் போன்ற முகாமைத்துவ செயற்பாடுகளின் கட்டமாக செயற்தினனாகவும் மற்றும் வினைத்திறனாகவும் அமுல்படுத்தும் தேவை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பட்டியல்கள் செலுத்த வேண்டி ஏற்பட்டமையினால் பணிகள் இன்றிய சந்தர்ப்பங்களின் போது மின்சார உபகரணங்கள் அமுல்படுத்தப்படாமல் செயற்படாமல் வைப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு வாய் மூல ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் எந்த உரு சந்தர்ப்பங்களிலும் முழுமையாக மூடி வைப்பதற்கு கட்டளையிடப்படவில்லை. இதற்கு மேலதிகமாக அந்த கூட்டிணைந்த மேடைகளின் உத்தியோகத்தர்கள் தனியார் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக உற்பத்திப் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஊடாக கிடைத்திருந்த தகவல்களின் காரணமாக அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பிரிவில் மேற்கொள்ளப்படுகின்ற நாளாந்த கடமைகள் தொடர்பாக அறிவிப்பதற்கு நாளாந்த தனி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக Job Card திட்ட முறைமை அமுல்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | வெளி நிறுவனம் ஊடாக உற்பத்திகள் மேற்கொள்ளப்படாமல் கம்பனியில் நிகழ்ச்சித் திட்டங்களை உற்பத்தி செய்து நிறுவனத்தின் விற்பனைக்காக உயர்ந்த பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு 06 உபாய வழிகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை அடைந்து கொள்வதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக விரிவாக கண்டறிந்து உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டமிடப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 ஆம் ஆண்டில் உற்பத்திப் பிரிவில் திட்டமிடப்பட்ட பெறுகைகளுக்கு உரிய தகவல்கள் அதாவது பெறுகை விபரங்கள், மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம், நிதிய வழங்கல் மூலம் தொடர்பான பெறுகைத் திட்டத்தில் குறிப்பாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான விரிவாக கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகளுக்கு உரிய தகவல்களை உள்ளடக்கி பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2022 ஆம் ஆண்டு முதல் அமுல் படும் வகையில் 2012 ஆம் ஆண்டில் இருந்து சேகரிப்பதற்கு உள்ள கடன் பணத்தை அறவிடுவதற்காக இலக்கிடப்பட்ட வேலைத் திட்டம் ஒன்று 2022 – 2026 கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 2014 – 2021 வருட கால எல்லையில் இருந்து அறவிட வேண்டிய ரூபா மில்லியனை விஞ்சிய கடன் பட்டோர் மீதிகள் 21 இன் கூட்டுப்பெறுமதி ரூபா 172,420,860 தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது. | கடனை அறவிடுவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன் கடனை அறவிடும் உத்தியோகத்தர்களால் பல வருடங்களில் இருந்து கொண்டு வரப்படுகின்ற கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை தெரிவிக்கின்றோம். | இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 – 2026 கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2022 இன் வருடாந்த விற்பனை ரூபா ஒரு பில்லியன் பெறுமதி மற்றும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 903 மில்லியன் தொகை அந்த அந்த ஆண்டுகளின் போது இலக்காகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருடாந்த விற்பனை இலக்காக முறையே ரூபா 860 மில்லியன் மற்றும் ரூபா 587 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனியின் கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்ட ஐந்து வருட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது எதிர்பார்க்கப்படுகின்ற வருடாந்த 5 சதவீதம் படி விற்பனை இலக்கை அதிகரித்து கொள்ளல் ஆகும். வருடாந்தம் தயாரிக்கப்படுகின்ற செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கம் போது முன்னை ஆண்டின் விற்பனை இலக்கை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டத்தை திருத்த வேண்டி உள்ளது. | கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 4.3 உள்ளளக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் 2(1) ஆம் உப பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ஒன்றை அங்கீகரித்துக் கொள்வதற்காக இந்த அறிக்கைத் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளரை அங்கீகரித்துக் கொள்வதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். |